புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 December 2023 ISSN: 2456-821X

==========================================================================

# மன்னரின் கடமையும் சங்கமகளிர் விருந்தோம்பல் பண்பாடும்

முனைவர் த சங்கீதா, எம்.ஏ. எம்.எட் பி.எச்.டி
பிஷப் தார்ப் கல்லூரி,தாராபுரம்.

==========================================================================

ஆய்வுச் சுருக்கம்:

மலைகளிலும் காடுகளிலும் விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்த மனிதன் நிலையான ஒரு இருப்பிடம் அமைத்து நான்கு நிலங்களாக நிலங்களைப் பகுத்தும் அடர்ந்த நிலப்பகுதிகளில் பசுநிரைகளை மேய்த்தும், தனது வாழ்வின் நிலைகளைப் படிப்படியாக உயர்த்தினான். அவ்வாறு, உயர்ந்ததற்குச் சங்க இலக்கியங்களின் பாடல்கள் சான்றாக உள்ளது. மனிதன் கூடி வாழ தொடங்கியவுடன் ஆடைகள் ஆபரணம்,விருந்தோம்பல் என்ற பண்பாடுகள் உருவானது.உறவுகளும் உறவு முறைகளும் ஆரம்பமாகியது. மன்னனும் ,ஆட்சியும் ,ஆட்சி முறைகளும் மாற்றம் பெற்றுக் கொண்டு சிறந்த வளர்ச்சி நிலைகளை மனித சமுதாயம் அடைந்தது.நான்கு நில மக்களின் பெயர் பாகுபாடுகள்,மன்னரின் கடமை,பண்பாடு கொண்ட வேந்தர்கள்,வள்ளுவரின் வழி வாழ்வு,உணவின் உயர்வு பெண்கள் விருந்தினர்களை உபசரித்தல் ஐங்குறுநூற்றில் ஆபரணங்கள்,பருத்திநூல் நூற்கும் பெண்கள்,வியாபாரத்தில் பெண்களின் நிலை என சங்க இலக்கியத்தில் , அக்கால மக்களின் பண்பாடுகளில் சிலவற்றை மட்டும் இவ்வாய்வில் முன்வைக்கப்பட்டுள்ளது.

முன்னுரை:

தமிழ் மக்கள் பண்டைய நாளில் நாவலன் தீவு முழுவதிலும், உலகில் பெரிய இடங்களிலும் பரவி வாழ்ந்தார்கள் .ஆயினும் அவர்தம் தமிழ் மொழி சிதையாது வளர்ந்து சிறந்ததற்கு நிலங்களமாய் விளங்கும் இடங்களான குறிஞ்சி ,முல்லை, மருதம், நெய்தல் என நான்கு வகையாகப் பகுத்து நானிலம் என்ற பெயரால் பண்டைய தமிழ் மக்கள் வழங்கி வந்தனர். நாட்டின் அமைதிக்கு ஏற்ப அந்நாட்டில் தோன்றி வழங்கும் தாய் மொழியின் சொல் வழக்குகள், பண்பாடுகள், நாகரீகம், பழக்கவழக்கம் நம்பிக்கைகள் சங்க இலக்கண இலக்கிய நூல்கள் அக்கால மக்களின் வாழ்க்கையும், சமுதாய நிலைகளைக் கண்முன்னே காட்டும் காலக் கண்ணாடியாக நமக்கு கிடைத்துள்ளன. மலைகளில் விலங்குகளை வேட்டையாடி தினை முதலியவற்றை விதைத்து வாழ்ந்தவர்கள் குறிஞ்சி நில மக்கள். காடு அடைந்த நிலப்பகுதிகளில் பசு நிரைகளை மேய்த்து ,வரகு பயிர் செய்து வாழ்ந்தவர்கள் முல்லை நில மக்கள். இவர்களை ஆயர் என வழங்குதல் மரபு.

காடுகெடுத்து நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கி நிலந்திருத்தி நீர் பாய்ச்சி நெல் முதலிய நன்செய்ப்பயிர்களை விளைவித்து அரசியலமைத்து வாழ்ந்தவர்கள் மருத நிலமக்கள். இவர்கள் உழவர் என வழங்கப் பெறுவர்.

கடலோரத்திலே குடில் அமைத்துக் கொண்டு கடலில் படகுகளைச் செலுத்தி வலை வீசி மீன் பிடித்து உப்பு விளைவித்து விலைப் படுத்தி வாழ்தலையே தொழிலாகக் கொண்டவர்கள் நெய்தல் நிலமக்கள் இவர்கள் பரதவர் என வழங்கப் பெறுவார்கள்.அக்காலப்பெண்களின் விருந்தோம்பல் , மன்னர்புலவரின்நிலை, பண்பாடு பழக்கவழக்கம் ,இவ்வாய்வில் ஆராயப்பட்டுள்ளது.

*நான்கு நிலமக்களின் பெயர் பாகுபாடுகள்*

*நானில மக்கள் தங்கள் ஊர் தோறும் தங்களுக்கேற்ற தலைவன் ஒருவனது காவலின் கீழ் அடங்கி வாழ்ந்தார்கள். குறிஞ்சி நில தலைவனே வெற்பன் என்றும், முல்லை நில தலைவனை குறும்பொறை நாடான் என்றும், மருத நில தலைவனை ஊரன் என்றும், நெய்தல் நிலத் தலைவனைத் துறைவன் என்றும் வழங்குதல் மரபு.*

*சேர மன்னர்கள் வானளாவிய மலைகளில் வாழ்ந்தமையால் அங்குள்ள கொடிய விலங்குகளைத் தங்கள் வலிய வில் வேட்டையினால் கொன்று போக்கினார்கள் வில்லால் போர் செய்து வீரத்தை விளைவித்த வேந்தர்கள் வில் எழுதிய கொடியினைத் தங்களுக்கு அடையாளமாகக் கொண்டார்கள்.*

*மீன் தன் கண்களால் நோக்கித் தன் குஞ்சுகளை வளர்ப்பது போல தம் குடிகளைக் கண்ணிமையாது நோக்கி நின்று கடற்கோளில் காப்பாற்றிய பாண்டியர்களுக்கு 'கயல் மீன்' எழுதிய கொடி அடையாளமாயிற்று.*

*சோழர்கள் ஆண்ட நிலப்பகுதி காடாயிருந்தமையால் ,அங்குள்ள புலி முதலிய விலங்குகளை வேட்டையாடி கொன்று போக்கி காடுகெடுத்து நாடாக்கினார்கள். வலிமை மிக்க புலிகளை வென்று மக்களுக்கு நலம் செய்த சோழர்களின் வெற்றி வன்மைக்கு அறிகுறியாகப் புலி எழுதிய கொடி அடையாளம் ஆயிற்று.*

*'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு'என இத்தமிழகத்தை மூவேந்தர்க்கு பொதுவாக தொல்காப்பியனார் உரிமை செய்து கூறியுள்ளார்.*

*மன்னரின் கடமை*

*நாட்டின் வளமான நிலைக்கும் சிறந்த ஆட்சி முறைக்கும் வீரர்கள் போர்க்களத்தில் வெற்றியை ஈட்டி வருவதற்கும் அடிப்படையாக அமைவது உழுது விளைவித்த நெல்லின் பயனே ஆதலால் ஏரைக் காப்பவரின் குடியைக் காப்பதே நல்ல அரசின் கடமையாகும்.*

*'வருபடை தாங்கிப் பெயர்புறத் தாய்க்குப்*
*பொருபடை தரூஉங் கொள்ளும் உழுபடை*
*ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே*
............,..................................................
*பகடுபுறந் தருநர் பார போப்பின்*
*குடிபுறந் தருகுவை'*
*புறம் 35;24-34*

*'நெல்லும் உயிரன்றே; நீரும் உயிர ன்றே;*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்*
*அதனால் 'யானஉயிர்' என்ப தறிகை*
*வேனமிகு தானே வேந்தற்குக் கடனே*
*புறம் 186*

. *தமிழ் வேந்தர்களிடம் காணப்பெற்ற ஒற்றுமை திறன், குடிபுகுந்த மக்களைப் பாதுகாத்தமை, நாட்டில் உள்ள நெற்பயிர்களும் வாழ வேண்டும். மக்களும் மகிழ்வோடு தனது ஆட்சியில் இருக்க வேண்டும். என்று சிறந்த பண்பாடு கொண்டு மக்களைக் காப்பது தனது கடமையாக வாழ்ந்துள்ளார்கள் என்பதைப் புறப்பாடல் மூலம் அறிய முடிகிறது.*

*பண்பாடு கொண்ட வேந்தர்களாக்க புலவர் கூறும் கூற்றுக்கள்*

*'அறத்தின் மண்டிய மறப்போர்*
*வேந்தா'*
*புறம்*

*"வேந்தர் பெருமானே, யானை ,குதிரை, தேர் ,காலாள் என்னும் நாள்வகைப் படைகளாலும் மன்னர்களது சேனை சிறப்பித்து இருந்தாலும், அறநெறியை அடிப்படையாகக் கொண்டது அரசர் பெறும் வெற்றியாகும். அதனால், 'இவர் நமக்கு அயலார்; எனக் கருதிப் பிறருடைய*

நற்குணங்களைப் போற்றாமலும் ,வேண்டியவர் என்று கருதித் தம்மவர் செய்த கொடுந்தொழிலைப் பொறுத்துக் கொள்ளாமலும், போற்றாமலும் ஞாயிற்றை ஒத்து வெம்மை மிக்கு தீயாரைக் கொள்ளும் வீரமும், திங்களையொத்து உளங்குளிர்ந்து நல்லாரைப் போற்றும் அருளுடைமையும், மழையைப் போன்று எல்லோர்க்கும் வரையாது வழங்கும் வன்மையும் என இம்மூன்று குணங்களையும் உடையவனாகி வறுமையுற்றார் இல்லாமல் நீ நெடுங்காலம் வாழ்வாயாக என 'மருதன் இளநாகனார் நன்மாறனுக்கு அரசியல் முறையினை அறிவுகூறியுள்ளார்."

அறத்தினை, பண்பாடுகளைக் கொண்டது தமிழ் வேந்தர்களது அரசியல் நெறியாகும்.

வள்ளுவர் சொல்லும் வாழ்க்கைப் பண்பாடு

'அறம், பொருள், இன்பம்' என்னும் மூன்று பொருட்களையும் மும்முதற் பொருள் என தமிழர் பாராட்டி போற்றுவர் .எல்லா உயிர்களும் விரும்பப்படுவது இன்பம். அவ்வின்பத்திற்குக் காரணமாக மக்களால் ஈட்டப் பெறுவது பொருள்; நடுவு நிலையில் நின்று பொருட்களை ஈட்டுதற்குரிய ஒழுங்குமுறை அறம், அறத்தினாற் பொருள் செய்து, அப்பொருளால் இன்பம் நுகர்தல் மக்கள் வாழ்க்கை முறையாகும். இம்முறையினை ஆசிரியர் திருவள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பாலாக வகுத்து விளக்கியுள்ளார்.

சங்க கால மக்களின் வாழ்க்கை நிலையை இரண்டு பிரிவுகளாகச் சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். இல்லற வாழ்க்கை பற்றிய செய்திகளை அகம் என்றும், கொடை, போர், வீரம், ஆட்சி, முதலியவற்றைப் பற்றிய செய்திகளைப் புறம் என்றும் சங்க இலக்கியங்கள் பிரித்துக் காட்டுகின்றன.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்.... குறள் மூலம் அனைத்து உயிர்களும் சமமே என்றும்,"யாதும் ஊரே யாவரும் கேளிர்'.. என்ற சமத்துவம் சகோதரத்துவத்தை உலகிற்கு முதலில் உரத்துச் சொன்னது தமிழ் இலக்கியங்களே. ஆடம்பரம் பெருகிவிட்ட இன்றைய நாகரீக அவசர உலகில்" உண்பது நாழி, உடுப்பவை இரண்டே'.. என்ற சிந்தனை தனிமனித வாழ்வை சிக்கனத்துடன் நிதானித்து நடைபோட வைக்கிறது.

பண்டைத் தமிழர்கள் வாழ்வியலாகக் கடைப்பிடித்தொழுகிய வாய்மை, செய்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை, புறங்கூறாமை,இன்னாசெய்யாமை, ஈகை, விருந்தோம்பல், இல்லற மாண்பு போன்ற அறம் சார் நெறிகளில் இருந்து மனித வாழ்வு வழுவிச் செல்லலாகாது என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் புலவர்கள் அழுத்தமாகக் கூறியுள்ளார்கள்."

உணவின் உயர்வு

ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன் என்பதைப் போல உணவில்லாத மனிதன் உயிரற்ற மனிதன் எனலாம். மக்களுக்குத் தேவையான அடிப்படை பொருள்களான ஊன், உடை, உறைவிடம் என்பவற்றில் உடையும், உறையிலும் இன்றிக் கூட உயிர் வாழலாம். ஆனால், உணவின்றி உயிர் வாழ்ந்தவர் இல்லை ."உணவெ னப்படுவது நிலத்தோடு நீரே"என புறநானூறு உரைக்கின்றது. உணவு மனிதனின் உயிர்நாடி, உணவில்லையேல் இவ்வுலகம் இல்லை, உலகின் அறம், ஒழுக்கம், மேன்மை எல்லாம் உணவில் அடங்கி இருக்கிறது. எனவே தான் "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று புறநானூறு உரைக்கிறது.

" உணாவே வல்சி யுண்டி யோகன்
மசனம் பதமே யிரையா கார
முறையே யூட்ட முணவென லாகும்"

என உணா, உண்டி ,அசனம், பதம், இரை ,ஆகாரம் ,உறை, ஊட்டம் என்பவற்றை உணவின் பெயர்களாகப் பிங்கலநிகண்டு குறிப்பிடுகிறது.

விருந்தினர்களை உபசரித்தல்

அடிப்படை தேவைகளில் மனிதனுக்கு மிகவும் முக்கியம் உணவின் தேவையே 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'என்று போற்றினர். இல்லாதோர் விருந்தை நோக்கி செல்லுதலும் இருப்போர் விருந்து எதிர்நோக்கி இருத்தலும் புறநானூறு வெளிப்படுத்தும்

பழந்தமிழர்களுடைய பண்பாடாகும். பசிநோயினைப் போக்குபவர் பசிப்பிணி மருத்துவர் எனப் போற்றப்பட்டனர்.

விருந்தென்று வருவோர்க்கு இல்லை என்று சொல்லாமல் தன்னிடம் இருப்பதைக் கொடுத்து அவர்களின் பசியைப் போக்குதலும் விருந்தினர் உண்ட பின்பே தாம் உண்பதும் பண்டைத் தமிழ்மகளிர் பண்பாகிறது.

நாட்டில் உணவுத் தட்டுப்பாட்டைப் போக்க வறியவர்களுக்கு உண விட்டால் மட்டும் போதாது, அவ்வுணவை அனைவரும் பெரும் வழிவகைகளை ஆராய்ந்து அவற்றைப் பெருக்க வேண்டும் அதற்கு வேளாண் தொழிலினைப் பெருக்குவது சிறந்த வழி என்பதை பழந்தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். சமுதாய வறுமை நிலையினை போக்கவும் மக்களின் அடிப்படை தேவைகளில் உணவின் தேவையை நிறைவு செய்யவும் வேளாண் தொழில் இன்றியமையாதது.

நலங்கிள்ளியின் படைகளில் பண்பாட்டின் வெளிப்பாடு

நலங்கிளியின் படைப்பெருக்கத்தைப் புனைந்த ஆலந்தூர் கிழார் , படையின் முன் செல்லும் தூசிப்படையினர் பனைப்பின் நுங்கினை உண்டதாகவும் கடையோர் பனையின் சுடுகிழங்கினை உண்டதாகவும் கூறுவர். நுங்காய் இருந்து கிழங்காய் மாறும் வரை படை பல திங்கள் அணிவகுத்துச் சென்றமையை உய்த்துணறுமாறு செய்த கற்பனை அறிவுக்கு நல் விருந்தாகும்.

"தலையோர் நுங்கின் தீஞ்சேறு மிசைய
இடையோர் பழத்தின் பைங்கனி மாந்தர்
கடையோர் விடுவார்கள் பிசிரோடு சுடுகிழங்குநுகர"
(புறம் 255;3)

நுங்கு,கனி,கிழங்கு ஆகியவற்றை உணவாகப் பயன்படுத்திய வழக்கம் இதனாற் புலனாகும்.

குழந்தைக்குச் சங்ககாலப் பெண்கள் உணவு ஊட்டல்

தேன் கலந்த வெண்சுவைத் தீம்பாலைப் பொற்கலத்தேந்திச் செவிலியர் கோவைக் காட்டிக் குழந்தைக்குப் பாலூட்டுவர். குழந்தைக்கு உணவு ஊட்டும் போது அவை உண்ண மறுக்குங்கால் மனத்தை மாற்றிச் சில முறைகளை கையாள்வர்.'இது அப்பாவுக்குரிய பங்கு',இதனை உண்பாயாக,இது தாயின் பங்கு,இதனை உண்பாயாக, எனச் சோறூட்டுதலை,
'நுந்தைபால் உண்டி சில; ஞாயர்பால் உண்டி சில'
என்று கலித்தொகைப் பாடல் அக்கால மக்களின் வாழ்க்கை நிலைகளையும் காட்டுகிறது.

பண்ணியங்கள் தந்து உபசரித்தல்

இல்லம் வரும் விருந்தினர்கள் ஊனம் உணவை வெறுத்தால், பால் கலந்து செய்தனவும் வெல்லப்பாகு கொண்டு செய்தனவும் ஆகிய இனிய பண்ணியங்களைப் புரவலர்கள் தந்து அவர்களை இன்புறுத்துவர்.இரவில் வாயிற் கதவை அடைக்கும் முன் உண்ணும் விருந்தினர்கள் யாரேனும் உளரா எனப் பார்த்து கதவடைப்பதுஅக்காலப் பெண்களின் சிறப்பான பண்பாட்டு வாழ்வாகும்.

'பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ எனவும்
வாரலர் தோழி காதலோரே'
(குறுந்தொகை 118)

பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ சேய்தோ கூறுமி னெமக்கே
புறநானூறு173;11-12

இல்லாதோர் விருந்தை நோக்கி செல்லுதலும் இருப்போர் விருந்தை எதிர்நோக்கி இருத்தலும் புறநானூறு வெளிப்படுத்தும் பழந்தமிழர் பண்பாகும். வந்த விருந்தினருக்கு உணவளித்து இன்னும் விருந்து வர காத்திருக்கும் பண்பை

'விருந்தெதிர் பெறுகதில் யானே '
(புறம்306;5 )

என்ற புறநானூறு அடிகள் உணர்த்துகிறது.

இப்பாடல் சங்க கால மக்களின் விருந்தோம்பல் உயர்வையும் வழக்காற்றையும் புலப்படுத்துகிறது. விருந்துக்கு வரும் மக்கள் இரவுக் காலங்களில் வரினும் மனமகிழ்ந்து ஏற்று அவர்களை மகளிர் மகிழ்வோடு விருந்தளித்ததை அறிய முடிகிறது.சங்ககாலம் முதல் இக்காலம் வரை அன்பு கொண்ட தலைவியாகவே உபசரிப்பிலும் பெண்கள் வருவது தமிழினத்தின்பழமைச் சிறப்பு மாறாமல் உள்ளது.

அக்கால மகளிர்களின் வியாபாரம்

இக்கால பெண்கள் எல்லாத் துறைகளிலும் தன்னுடைய பணியில் தனது பங்களிப்பைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

பரத மகளிர் கடல் மீனை திருவிழா நடக்கிற ஊர்களில் கொண்டு போய் எளிதில் விற்றதைச் சீத்தலைச் சாத்தனார் கூறுகிறார்.

."திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்
தழையணி அல்குல் செல்வத் தங்கயர் விழவயர் மறுகின் விலையெனப்
பகரும்
கானலஞ் சிறுகுடி"

(அகம்320 2-5)

மீனை நெல்லுக்கு மாற்றினார்கள். பண்ட மாற்றினால் கிடைத்த நிலை அம்பியில் ஏற்றிக்கொண்டு கழிகளின் வழியே வந்ததைப் பரணர் கூறுகிறார்.

'மீன் தொடுத்து நெல் குவைஇ
மிசை அம்பியின் மனைமறுக்குந்து'

(புறம்342:1-2)

உழவர் மகளிர் தெருக்களில் பூ
விற்றதை பாலை பாடிய பெருங்கடுங்கோ
'புதுமலர் தெருவுதொறும் நுவலும் நொதுமலராட்டி'

(நற்றிணை118:8-11)

என்று கூறியுள்ளார்.

பெண்ணொருத்தி மலர் விற்றதை பாண்டியன் மாறன்வழுதி தம்முடைய செய்யுளில் ,

'துய்த்தலை இதழ்பைங் குருக்கத்தியொடு
பித்திகை விரவுமலர் கொள்ளிரோ என
வண்டு சூழ் வட்டியும் திரிதரும்
தண்டலை யுவர் தனிமடமகள்'

(நற்றிணை 97:6-9)

பூ விற்ற பெண்களும் பூவை நெல்லுக்குப் பண்டமாற்றுச் செய்தனர் என்பதைச் சொல்லாமலே விளக்குகிறது இப்பாடல் வரிகள்.

ஆடைகளும் மக்களின் முன்னேற்றமும்

மக்களின் உரிமைத் தேவைகளில் உணவிற்கு அடுத்த நிலை பெறுவது உடையாகும். தழை ,மரப்பட்டை போன்றவற்றை உடுத்திய ஆதி மனிதன் தன் தேடலால் விலங்குகளின் தோலினையும் பயன்படுத்தினான். பின்னர் நாகரீக வளர்ச்சியால் உந்தப்பட்டவன் நூலாடைகளை உற்பத்தி செய்யும் நிலைக்கு உயர்ந்தான். இவ்வகை மூன்றாம் படிநிலை வளர்ச்சியிலிருந்து தொலைநோக்கு பெறப்படுகிறது.

பழந்தமிழ் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் உடையின் தேவையை நிறைவு செய்ய இரண்டு வகையான வழிமுறைகளைச் செயல்படுத்தி வந்துள்ளமை அறிய முடிகிறது. ஒன்று வறியவர்களுக்கு உணவோடு உடையையும் கிடைக்கச் செய்தல், மற்றொன்று உடையின் உற்பத்திக்கு அடிப்படையான தொழிலினைப் பெருக்குதல் என்ற இரண்டும் ஆகும்.

பாம்பின் தோல் போன்ற வடிவையுடையனவும் ,மூங்கில் உள் பக்கத்தில் உள்ள தோலைப் போன்றனவும், நெய்யப்பட்ட நூல் இலைகளின் வரிசை அறிய முடியாத பூ வேலைப்பாட்டுடன் கூடியனவுமாகிய ஆடைகளை வறியவருக்குக் கொடுத்து உடுக்கச் செய்த செய்தி,

'பாம்புரி யன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியி னிழையனி வாரா
ஒண்பூங் கலிங்க முடிஇ'
( புறம்383;9-11)

என்ற பாடல் அடிகளால் நாம் அறிய முடிகிறது இதைப்போல, மணி, பொன், முத்துக்களோடு பல்வேறு வகையான உடைகளை வழங்கிய செய்தியை

'வேறுபட்ட வுடையுஞ்,சேறு பட்ட தசும்பும்'
(புறம்377;18-19)

என்ற அடிகள் உணர்த்துகிறது.

நெசவுத் தொழிலுக்கு அடிப்படையான பருத்தியை உள்நாட்டிலேயே விளைவித்த செய்தியினை புறநானூறு காட்டுகிறது. பருத்தி மிகுதியாக பயிரிடப்பட்டதை ,

'பருத்தி வேலிச் சீறூர்'
(புறம்299;1)

நெசவுத் தொழிலில் பெண்கள் ஈடுபட்டு வந்தமைக்கான குறிப்புகளும் புறநானூற்றில் காணப்படுகின்றன.

'பருத்திப் பெண்டின் பனுவ லன்ன'
(புறம்125;1)

'பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து'
(புறம்326;5)

இப்பாடலால் பெண்கள் வீட்டில் விளக்கொளியில் நூல் நூற்ற செய்திகளை அறியமுடிகிறது. பெண்கள் கலிங்கம் என்னும் ஒருவகை ஆடையை அணிந்தனர் அது கலிங்க நாட்டில் இருந்து வந்தது என்பதால் அப்பெயரால் அழைக்கப்பட்டது.காந்தார நாட்டில் இருந்து வந்த துணி வகை காந்தாரம் எனப் பெயர் பெற்றது. புனலாட செல்வோர் அதற்கென தனி ஆடை உடுத்தினர் .அது புட்டகம் ,ஈரணி என்று வழங்கப்பட்டது.

'புட்டகம் பொருந்துவ புனைகுவோரும்;
(பரிபாடல்12;17)

தலைவன் தனது காதலியின் இயல்பைத் தோழனிடம் கூறுகிறான். அவள் சங்கு வளையல்களையும் ஞாழல் தழையால் ஆன ஆடைகளையும் அணிந்தவள்

'கானல் காவல் கவின் பெறு தழையள்' என்கிறான்.

சங்கப்பாவைகளின் ஒப்பனை

மகளிர் ஆடை அணிகலன்களோடு பிற ஒப்பனையால் பொழிவதைச் சங்க இலக்கியங்கள் கூறுகிறது. கழன் மணியினது கனியால் கூந்தலை வகுத்து ஒழுங்கு படுத்தினர்.

'கழற்கனி வகுத்த துணைச் சில் ஓதி
குறுந்தொடி மகளிர்.(புறம்97.23)

செம்பஞ்சுக் குழம்பினைப் பூசினர்.

நெற்றியில் பொட்டிட்டனர்.தேன்கமழி திருநுதல் திலகம் தைஇறம்' கூந்தலில் எண்ணெய் தடவி தகரச் சாந்து பூசி, நீராடி ,கூந்தலின் ஈரம் போக விரலால் உணர்த்தி, நறுமணம் மிக்க அகிற்புகையூட்டினர்.

'எண்ணெய் நீவிய கரிவளர் நறுங்காழி
தண்நறுந் தகரம் கமழ மண்ணி
(அகம்383:13)

*சங்கப் பெண்களின் கூந்தல் அலங்காரம்*

*மகளிர் கூந்தலை நீளமாக வளர்த்தனர். அதனை அவர் நெய் பூசி அழகாக வாரிப் பின்னலாக கொண்டையாக முடிப்பர் .ஐந்து விதமாகக் கூந்தலை அமைக்கும் வழக்கம் அக்காலத்தில் சிறந்திருந்தது என்ற சொல்லாட்சி இதற்குச் சான்றாக.*

*குழல்,அழகும், கொண்டை,பனிச்சை,குஞ்சை*

*என்பன ஐம்பால் என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார்.*

*சங்ககால மக்களின் அணிகலன்கள்*

*சங்ககால மக்கள் பல்வேறு வகையான அணிகலன்களைப் பயன்படுத்திய வழக்கம் காலில் பொன்னாலான சதங்கை, இடுப்பிலேயே பொன் மணியிலான வடம், அதன்மேல் சிவந்த பவளத்தால் செய்த வடங்கள் அவற்றின் மேல் பூந்துகில் கையில் அழகில் தொடி ,வாள் ,மழுப்போன்ற அணிகளை நெருங்கக்கட்டி அதன் இரண்டு புறத்திலும் காளை உருவம் தாங்கிய பவளத்தால் செய்த அணி, முத்தும் பல மணிகளும் பிறவும் கோத்த மூன்று வடங்கள் அவற்றுக்கு மேல் நீலப்பூபோலச்செய்த மணிமாலை ஆகியவற்றைச் சிறுவருக்கு அணிவித்து அழகு பார்த்தனர்.*

*சங்ககால இலக்கியத்தில் ஐங்குறுநூற்றில் அணிகள் பற்றிய பெயர்கள் வழை ,இழை, தொடி, காஞ்சி, சங்க வளையல், மணிப்பூண், மேகலை ,பாண்டில், சிலம்பு, கழல், என்று பாடல்களில் வந்துள்ளது.அக்கால மக்கள் ஆபரணங்களை இன்று போலவே அன்றும் அணிந்தார்கள் என்பதற்கு சிறந்த சான்றாக சங்கப்பாடல்கள் நமக்கு கிடைத்துள்ளது.*

*முடிவுரை*

*சங்ககால இலக்கியத்தில் ஐங்குறுநூறு , புறம்,அகம்,நற்றிணை பாடல்களில், அக்கால மக்களின் பெண்களின் வாழ்க்கை நிலைகளையும்,ஆபரணங்கள் ,நிலப்பகுப்பு ,சமுதாய நிலை,பெண்களின் வியாபாரம், குழந்தையைக் கவனித்து உணவூட்டல்,விருந்தினர்களை உபசரிப்பு, மீனிற்குபதிலாக நெல் வாங்குவது பூ தந்து நெற்களை வாங்குவது என அக்காலப்பெண்கள் பண்டமாற்று முறைகளை கையாண்டு உள்ளனர். பெண்களின் கூந்தல் அலங்காரம் இக்காலகட்டத்தில் செய்வது போல் அச்சமுதாயத்திலும் இருந்ததை அறிய முடிகிறது.அன்றைய சமுதாயத்தில் நிலவும் மன்னர் ஆட்சியில் , புலவர்கள் மன்னர்க்கு அறிவுரைகள் சொல்லிப் போற்றிய செய்திகள் மனிதனுக்கு அன்றாடத் தேவையான உணவும் ,உடையின் வளர்ச்சி .வாழ்வியல் பண்பாடுகளும் ஆராயப்பட்டுள்ளது.*

*துணை நூற்பட்டியல்:*

*1.துரைசாமிப் பிள்ளை,ஔவை,சு.*
*பதிற்றுப்பத்து, மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை,1968.*

*2.துரைசாமிப் பிள்ளை,ஔவை.சு.*
*புறநானூறு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை1970.*
*3.இரா.இராகவையங்கார் ,குறுந்தொகை விளக்கம், 2,சிங்காரவேலர் தெரு,தியாகராயர் நகர்,சென்னை 17.*
*4.இராகவையங்கார்.இரா.*
*அகநானூறு மூலமும் உரையும், கம்பர் புத்தகாலயம்,மயிலாப்பூர், சென்னை.*
*5.வேங்கடராமன்.H.*
*டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்,பெசன்ட் நகர், சென்னை 90.1989*

******** ******** ********* ******** ******** ********* ********* *********